**ஜனவரி – 13**

# TNPSC துளிகள்

- பொதுமக்கள் தங்கள் நிலம் தொடர்பான ஆவணங்களின் விவரங்களை கைபேசி மூலம் அறிந்து கொள்வதற்காக "Tamilnilam Geo-Info App" என்ற செயலியைத் தமிழ்நாடு அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.
- தமிழ்நாடு மாநில அரசானது, சுய உதவிக் குழுப் பெண்களை நாடு முழுவதும் உள்ள ஒரு ஆலோசனை வழங்கீட்டாளர்கள், சக சுய உதவிக்குழுக்கள் மற்றும் அவர்களின் தயாரிப்புகளை வாங்கும் பிரிவினருடன் மிக நன்கு இணைப்பதன் மூலம் முன்னேற்ற நோக்கமுள்ளப் பெண்களுக்கு புதிய வாய்ப்புகளை வழங்குவதற்காகவும், அவர்கள் எளிதில் அணுகும் வகையிலுமான மின்மதி 2.0 செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- சுந்தரம்-கிளேட்டன் நிறுவனத்தின் முன்னாள் நிர்வாக இயக்குநரும், சுமார் 70 ஆண்டுகளாக TVS குழுமத்தில் ஓர் முக்கிய நபருமான H. லட்சுமணன் (92) காலமானார்.
- ஜம்மு காஷ்மீரில் 13.14 கி.மீ. நீளமுள்ள Z மோர்ஹ் சுரங்கப் பாதையினைப் பிரதமர் ஆவார்கள் திறந்து வைக்க உள்ளார்.
- மத்தியத் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சகம் ஆனது, 22 பட்டியலிடப்பட்ட மொழிகளின் செயல்பாட்டு ஆதரவுடன் கூடிய பன்மொழி e-Shram தளத்தின் செயல்பாட்டினைத் தொடங்கியுள்ளது.
- காடி (Gaddi) நாய் இனமானது, இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட நான்காவது பூர்வீக /நாட்டு நாய் இனமாகவும், இமயமலைப் பகுதியினைச் சேர்ந்த முதல் இனமாகவும் மாறியுள்ளது.
- வெளிநாடு வாழ் இந்தியர்களுக்காக (NRI) என்று பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட ஒரு அதிநவீன சுற்றுலா இரயிலான பிரவாசி பாரதிய விரைவு இரயிலினைப் பிரதமர் தொடங்கி வைத்துள்ளார்.
- ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி B.N.ஸ்ரீகிருஷ்ணா, அடையாள அட்டை சரி பார்ப்பு மற்றும் தரவுப் பகிர்வுத் தளமான ஈக்வல் நிறுவனத்தின் புதிதாக உருவாக்கப்பட்ட ஆலோசனைக் குழுவிற்குத் தலைமை தாங்க உள்ளார்.

# தமிழ்நாடு செய்திகள்

## வேளாண் நிலங்களில் சேதம் செய்யும் காட்டுப்பன்றிகளைக் கொல்லுதல்

- தமிழ்நாடு மாநில வனத்துறையானது, வனப்பகுதிகளுக்கு அருகிலுள்ள வேளாண் நிலங்களில் விவசாயிகளுக்கு பெரும் துன்பத்தினை ஏற்படுத்தும் காட்டுப்பன்றிகளை ஒழுங்கு முறைகளுக்கு உட்பட்ட வகையில் கொல்ல அனுமதிக்கும் அரசாணையினை பிறப்பித்துள்ளது.
- இந்த உத்தரவின் படி, காப்புக் காடுகளை ஒட்டியப் பகுதிகள் மூன்று மண்டலங்களாக வகைப்படுத்தப்படும்.
- மண்டலம் A வகை பகுதிகளில் (வன எல்லையிலிருந்து ஒரு கிலோ மீட்டருக்குள்ளான பகுதிகள்) காட்டுப்பன்றிகளை கொள்வதற்குத் தடைசெய்யப்பட்டுள்ளது.
- மண்டலம் B வகை பகுதிகளில் (ஒன்று முதல் மூன்று கிலோமீ ட்டருக்குள்ளான பகுதிகள்) காட்டுப் பன்றிகளைப் பிடித்து வனப்பகுதிகளில் விட வேண்டும்.
- மண்டலம் C வகை பகுதிகளில் (மூன்று கிலோமீட்டருக்கு அப்பாலானப் பகுதிகள்), காட்டுப் பன்றிகளை சுடுவதற்கு அதற்கான சிறப்புப் பயிற்சி பெற்ற வனத்துறை

ஊழியர்களுக்கு மட்டுமே அனுமதிக்கப்படும்.



## பாலியல் குற்றங்களைத் தடுப்பதற்கான மசோதாக்கள்

| Section | Offence | Punishment at present | Punishment proposed through legislation |
|---|---|---|---|
| 74 | Assault or use of criminal force to woman with intent to outrage her modesty | Imprisonment of either description for a term which shall not be less than 1 year, but which may extend to 5 years, and shall also be liable to a fine | Imprisonment of either description for not less than 3 years, but which may extend to 5 years with a fine |
| 75 (2) | Sexual harassment and punishment for sexual harassment specified in clause (I) or clause (ii) or clause (iii) of sub-section (1) | Rigorous imprisonment for a term which may extend up to 3 years, or with a fine, or both | Rigorous imprisonment for 5 years, and a fine |
| 76 | Assault or use of criminal force to woman with intent to disrobe | Imprisonment of either description for a term which shall not be less than 3 years, but which may extend to 7 years, and shall also be liable to a fine | Imprisonment for not less than 5 years, but which may extend to 10 years, and a fine |
| 77 | Voyeurism | "Imprisonment of either description for a term which shall not be less than 1 year, but which may extend to 3 years, and shall also be liable to a fine" | Imprisonment of either description for not less than 2 years, but which may extend to 5 years, and a fine |
| 77 | Voyeurism - Second or subsequent conviction | Imprisonment of either description for a term which shall not be less than 3 years, but which may extend to 7 years, and shall also be liable to a fine | Imprisonment of either description for not less than five years, but which may extend to 10 years, and a fine |
| 78 (2) | Stalking | Imprisonment of either description for a term which may extend to 3 years, and shall also be liable to a fine | Imprisonment for up to 5 years, and a fine |
| 78 (2) | Stalking - Second or subsequent conviction | Imprisonment of either description for a term which may extend to 5 years, and shall also be liable to a fine | Imprisonment for up to 7 years, and a fine |
| 124 (1) | Voluntarily causing grievous hurt by use of acid, etc. | Imprisonment of either description for a term which shall not be less than 10 years, but which may extend to imprisonment for life, and with a fine | Rigorous imprisonment for life, which shall mean rigorous imprisonment for the remainder of the person's natural life and a fine, or death |
| 124 (2) | Voluntarily throwing or attempting to throw acid | Imprisonment of either description for a term which shall not be less than 5 years, but which may extend to 7 years, and shall also be liable to a fine | Imprisonment of either description for not less than 10 years, but which may extend to imprisonment for life, and a fine |

- தமிழ்நாடு சட்டமன்றம் ஆனது 2025 ஆம் ஆண்டு குற்றவியல் சட்டங்கள் (தமிழ்நாடு திருத்தம்) மசோதா மற்றும் 2025 ஆம் ஆண்டு தமிழ்நாடு பெண்கள் மீதான பாலியல் துன்புறுத்தல் தடை (திருத்தம்) மசோதா ஆகியவற்றினை நிறைவேற்றியுள்ளது.
- பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களுக்கான தண்டனையை அதிகரிப்பதும், எண்ணிம மற்றும் மின்னணு தளங்களில் அவர்களைத் துன்புறுத்துபவர்களுக்கு எதிராக வழக்குத் தொடுப்பதும் இந்த மசோதாக்களின் ஒரு நோக்கமாகும்.
- பாலியல் வன்கொடுமை குற்றவாளிக்குத் தற்போதைய 10 ஆண்டுகளுக்குப் பதிலாக, குறைந்தபட்சம் 14 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை விதிக்க குற்றவியல் சட்ட மசோதா முன்மொழிகிறது.
- பாலியல் வன்கொடுமை செய்பவர் காவல்துறையில் ஓர் அங்கத்தினராக இருந்தால், குறைந்தபட்ச கடுங்காவல் சிறைத் தண்டனையை 20 ஆண்டுகளாக இரட்டிப்பாக்க உள்ளது.

- பாலியல் வன்கொடுமைக்கு ஆளானவர் 12 வயதுக்குட்பட்டச் சிறுமியாக இருந்தால், குற்றவாளிக்கு குறைந்தபட்ச தண்டனையாக ஆயுள் தண்டனையும் அதிகபட்சமாக மரண தண்டனையும் விதிக்கப்பட வேண்டும் என்று இந்த மசோதா கோருகிறது.

## கோயில்களின் உபரி நிதி





- வருவாய் நிறைந்த கோயில்களின் உபரி நிதியை, 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலையத்துறை (HR&CE) சட்டத்தின் 36A, 36B மற்றும் 66(1)(a) முதல் (l) வரையிலான பிரிவுகளில் பட்டியலிடப்பட்டுள்ள சில நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்த முடியும் என்று சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- அதிக வருமானம் கொண்ட கோயில்களின் உபரி நிதியை, மிக குறைந்த வருமானம் கொண்ட கோயில்களுக்கு உதவி வழங்குதல், மதக் கோட்பாடுகளைப் பரப்புதல், வேதப் பள்ளிகளை நிறுவச் செய்தல், நுண்கலைகளை நன்கு ஊக்குவித்தல், இந்து குழந்தைகளுக்கான ஆதரவற்றோர் இல்லங்களை நிர்வகித்தல் போன்றவற்றுக்குப் பயன்படுத்தலாம்.
- மாறாக, உபரியை வணிக வளாகங்கள் கட்டுவதற்குப் பயன்படுத்தக்கூடாது.
- வணிக வளாகம் ஆனது, அதன் 66வது பிரிவின் (1)வது துணைப் பிரிவின் (a) முதல் (l) வரையிலான துணைப் பிரிவுகளின் வகையிலோ அல்லது 36A மற்றும் 36B பிரிவுகளின் இனங்களில் வராததால், வணிக வளாகம் கட்டும் முடிவை ரத்து செய்து ஒதுக்கி வைக்க வேண்டும்.

# தேசியச் செய்திகள்

## இந்திய சாலை உள்கட்டமைப்புகளின் வளர்ச்சி

- இந்தியாவின் தேசிய நெடுஞ்சாலை வலையமைப்பு ஆனது கடந்த பத்தாண்டுகளில் 60% வளர்ச்சியடைந்துள்ளது.
- 2014 ஆம் ஆண்டில் 91,287 ககிலோ மீட்டராக இருந்த இது 2024 ஆம் ஆண்டில் 146,195 கிலோ மீட்டராக விரிவடைந்துள்ளது.
- இது உலகளவில் இரண்டாவது பெரிய சாலை வலையமைப்பாக அமைகிறது.
- கூடுதலாக, அதிவேக வழித்தடங்களின் தொலைவானது 93 கிலோ மீட்டரிலிருந்து 2,474 கிலோ மீட்டராக அதிகரித்துள்ளன.
- 2024 ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆம் தேதி நிலவரப்படி, திட்டமிடப்பட்ட 3,105 கிலோ

மீட்டரில் 2,540 கிலோ மீட்டர் பாதை நிறைவடைந்துள்ள நிலையில், பன்னாட்டு நிதி உதவி பெறும் திட்டங்கள் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளன.




## மாற்றியமைக்கப்பட்ட இலவச சிகிச்சை திட்டம்





- மத்திய அரசானது, 'இலவச சிகிச்சை' திட்டத்தின் ஒரு புதுப்பிக்கப்பட்ட வடிவத்தினை வெளியிட்டுள்ளது.
- இது சாலை விபத்துகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பெரும் நிதி உதவி வழங்குவதை நோக்கமாகக் கொண்டது.
- இந்த முன்னெடுப்பின் கீழ், ஏழு நாட்கள் வரையிலான சிகிச்சைக்கான 1.5 லட்சம் ரூபாய் வரையிலான மருத்துவச் செலவினங்களை அரசாங்கம் ஏற்கும்.
- இந்த உதவியினைப் பெறுவதற்கு வேண்டி, விபத்து குறித்து 24 மணி நேரத்திற்குள் காவல்துறைக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்று அரசு கூறியுள்ளது.
- விபத்து ஏற்படுத்தி விட்டு தப்பிச் சென்ற வகை விபத்தில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு 2 லட்சம் ரூபாய் கருணைத் தொகை வழங்கப்படும்.

# சர்வதேசச் செய்திகள்

## தெற்கு கலிபோர்னியாவில் காட்டுத்தீ

- சமீபத்தில் அமெரிக்காவின் கலிபோர்னியாவில் ஏற்பட்ட கொடியக் காட்டுத்தீயால் லாஸ் ஏஞ்சல்ஸ் பேரழிவிற்கு உள்ளாகியுள்ளது.

- இந்த தீ விபத்தானது, இது வரையில் குறைந்தது 11 பேரின் உயிர்களைப் பலி வாங்கி உள்ளது மற்றும் சுமார் 10,000க்கும் மேற்பட்ட வீடுகள் மற்றும் பிற கட்டமைப்புகளை அழித்துள்ளது.
- 2022 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளில் பதிவான கடந்த இரண்டு குளிர்காலங்கள் ஆனது லாஸ் ஏஞ்சல்ஸ் பிராந்தியத்திற்கு வழக்கத்திற்கு மாறான பனிப் பொழிவினை வழங்கின.
- சாண்டா அனா நிகழ்வினால் தூண்டப்படும் காட்டுத்தீ கலிபோர்னியாவின் நிலப் பரப்பில் இயற்கையாகவே ஏற்படும் நிகழ்வாகும்.
- கிரேட் பேசின் பகுதி மீது உயர் அழுத்தம் உருவாகி கலிபோர்னியாவின் கடற்கரையில் அழுத்தம் குறைவாக இருக்கும்போது சாண்டா அனா காற்று வீசுகிறது.
- அழுத்தத்தில் உள்ள வேறுபாடு, தெற்கு கலிபோர்னியாவின் கிழக்கு மற்றும் வடக்கே, கிரேட் பேசின் பகுதியின் நிலப்பரப்பு சார் பாலைவனங்களிலிருந்து மலைகள் வழியாக பசிபிக் பெருங்கடலை நோக்கி மிக சக்தி வாய்ந்த காற்றின் இயக்கத்தைத் தூண்டுகிறது.
- அங்கு மிகவும் குறைந்த ஈரப்பதம் நிலவுவதால் அது தாவரங்களை உலரச் செய்து, அவற்றை எளிதில் தீப்பற்றக் கூடியதாக்குகிறது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## தோரியம் அடிப்படையிலான அணுசக்தி தீர்வுகள்


- NTPC லிமிடெட் நிறுவனமானது, செறிவூட்டப்பட்ட செயல்பாட்டுக் காலத்திற்கான மிக மேம்பட்ட அணுசக்தியை (ANEEL) உருவாக்குதல் மற்றும் அதன் பயன்பாடு குறித்து ஆராய்வதற்காக வேண்டி அமெரிக்காவின் கிளீன் கோர் தோரியம் எனர்ஜி (CCTE) என்ற நிறுவனத்துடன் ஓர் உத்தி சார் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- ANEEL என்பது அழுத்த கன நீர் உலைகளுக்கான (PHWRs) தோரியம் அடிப்படையிலான எரிபொருளாகும்.
- ANEEL எரிபொருளில், தற்போதுள்ள PHWR உலைகளில் தோரியத்தை எரிபொருளாகப் பயன்படுத்துதல், அணுக்கழிவுகளில் குறிப்பிடத்தக்க குறைப்பு ஆகியவை அடங்கும்.

❖ இது உள்நாட்டில் கிடைக்கும் தோரியத்தைப் பயன்படுத்தி இந்தியாவின் எரிசக்திப் பாதுகாப்பை மேம்படுத்துதல் மற்றும் ஒரு மேம்பட்ட பாதுகாப்பு மற்றும் அணுசக்திப் பரவல் எதிர்ப்பையும் உள்ளடக்கியது ஆகும்.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## உலகளாவிய பல் வகைப்பாட்டு நன்னீர் வாழ் விலங்கின மதிப்பீடு




❖ IUCN அமைப்பின் அச்சுறுத்தல் நிலையில் உள்ள இனங்களை உள்ளடக்கிய செந்நிறப் பட்டியலுக்கான முதல் உலகளாவிய பல் வகைப்பாட்டு நன்னீர் வாழ் விலங்கின மதிப்பீடு ஆனது சமீபத்தில் நடத்தப்பட்டது.


❖ இது மேற்குத் தொடர்ச்சி மலைகளை, மிக அச்சுறுத்தலுக்கு உள்ளான நன்னீர் வாழ்

இனங்கள் மிகுதியாக உள்ள ஒரு முக்கிய இடமாக அடையாளம் கண்டுள்ளது.

- இந்த விரிவான ஒரு உலகளாவிய மதிப்பீடு ஆனது 23,496 பத்துக் கால்களை உடைய ஓடுடைய இனங்கள், மீன்கள் மற்றும் தட்டான் இனங்களை உள்ளடக்கியது.
- கி.பி 1500 ஆம் ஆண்டு முதல் ஏறத்தாழ கால் பகுதி நன்னீர் இனங்களானது அதிக அழிவுரும் அபாயத்தை எதிர்கொள்கின்றன என்பதோடு மேலும் 89 இனங்கள் அழிந்து விட்டதாக உறுதிப்படுத்தப் பட்டதாகவும் மற்றும் 187 இனங்கள் அழிவிற்குள்ளாக உள்ளதாகவும் பதிவாகியுள்ளன.
- நன்னீர் வாழ் பத்துக்காலிகள், மீன்கள் மற்றும் தட்டான் இனங்களில், அச்சுறுத்தலுக்கு உள்ளான உயிரினங்களில் 54% ஆனது மாசுபாட்டால் பாதிக்கப்படுகின்றன. அதே நேரத்தில் 39% இனங்கள் அணைகள் மற்றும் நீரேற்ற பிரித்தெடுத்தல் அமைப்புகளால் பாதிக்கப்படுகின்றன.
- வேளாண்மையுடன் நெருங்கியது தொடர்புடைய நிலப் பயன்பாடு மாற்றம் ஆனது, இந்த உயிரினங்களில் சுமார் 37% இனங்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது, மேலும் ஊடுருவல் இனங்கள் மற்றும் நோய்களின் தாக்கம் ஆனது 28% இனங்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## WEF உலகளாவிய ஒத்துழைப்பு மாற்ற மதிப்பீட்டுமானி 2025




- உலகப் பொருளாதார மன்றத்தின் 2025 ஆம் ஆண்டு உலகளாவிய ஒத்துழைப்பு மாற்ற மதிப்பீட்டு நடவடிக்கையானது ஜெனீவா நகரில் தொடங்கப்பட்டுள்ளது.
- மிக நன்கு அதிகரித்துள்ள புவிசார் அரசியல் பதட்டங்கள் மற்றும் உறுதியற்ற தன்மை காரணமாக சர்வதேச ஒத்துழைப்பு தேக்கமடைந்துள்ளது என்பதை இது மிகவும் நன்கு வெளிப்படுத்துகிறது.
- உலகளாவிய ஒத்துழைப்பின் தற்போதைய நிலையை ஐந்து பிரிவுகளுடன் மதிப்பிடச் செய்வதற்காக இந்த மதிப்பீட்டுமானி 41 குறிகாட்டிகளைப் பயன்படுத்துகிறது-
    - வர்த்தகம் மற்றும் மூலதனப் பாய்வுகள்,

- புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்பம்,
- பருவநிலை மற்றும் இயற்கை மூலதனம்,
- சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு, மற்றும்
- அமைதி மற்றும் பாதுகாப்பு.

### ஹென்லே கடவுச்சீட்டுக் குறியீடு 2025




- ❖ உலகளாவிய கடவுச்சீட்டு குறியீட்டில் இந்தியாவின் தரவரிசையானது ஐந்து புள்ளிகள் குறைந்து இந்த ஆண்டு 85 ஆக உள்ளது.
- ❖ ஒரு இந்தியக் கடவுச்சீட்டு வைத்திருப்பவர் 57 இடங்களுக்கு நுழைவு இசைவுச் சீட்டு இல்லாமல் பயணிக்கலாம்.
- ❖ இந்தக் குறியீட்டில் சிங்கப்பூர் நாடு தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக முதலிடத்தில் உள்ளது.
- ❖ இந்தக் குறியீட்டில் 199 வெவ்வேறு கடவுச் சீட்டுகள் மற்றும் 227 வெவ்வேறு பயண இடங்கள் அடங்கும்.
- ❖ 2025 ஆம் ஆண்டிற்கான இந்தக் குறியீட்டின் படி, பாகிஸ்தான் மற்றும் வங்காள தேசத்தின் தரவரிசை முறையே 103வது (2024 ஆம் ஆண்டில் 101வது) மற்றும் 100வது (2024 ஆம் ஆண்டில் 97வது) இடத்தில் இருந்தது.
- ❖ 2024 ஆம் ஆண்டிற்கான ஹென்லே கடவுச்சீட்டுக் குறியீட்டில் இந்தியாவின் தரவரிசை உலகளவில் 80வது இடத்தில் இருந்தது.
- ❖ இந்த ஆண்டு ஜப்பானின் தரவரிசை 2வது இடத்தில் உள்ளதோடு இது 2018-2023 ஆம் ஆண்டு வரை அது முதலிடத்தில் இருந்தது.
- ❖ 2024 ஆம் ஆண்டில், ஜப்பான் மற்றும் சிங்கப்பூர் ஆகிய இரண்டு நாடுகளும் இதில் முதலிடத்தைப் பகிர்ந்து கொண்டன.


## முக்கிய தினங்கள்

### உலக இந்தி மொழி தினம் - ஜனவரி 10

- ❖ 1949 ஆம் ஆண்டு இதே நாளில் தான் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையில்

(UNGA) இந்தி மொழி முதன்முதலில் பேசப்பட்டது.

- இந்தி மொழி பற்றிய பெரும் விழிப்புணர்வைப் பரப்புதல், சர்வதேச தளங்களில் அதன் பயன்பாட்டை மிக நன்கு ஊக்குவித்தல் மற்றும் உலகளவில் இந்தி மொழி பேசும் சமூகங்களிடையே உறவுகளை வலுப்படுத்துதல் ஆகியவற்றை இது ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1950 ஆம் ஆண்டில், இந்தி மொழியானது இந்திய ஒன்றியத்தின் அதிகாரப் பூர்வ மொழியாக அறிவிக்கப்பட்டது மற்றும் இந்திய அரசியலமைப்பின் 343வது சரத்தின் கீழ் அதன் எழுத்து வடிவமாக தேவநகரியும் நியமிக்கப்பட்டது.
- 1975 ஆம் ஆண்டில், முதல் உலக இந்தி மொழி மாநாட்டை மகாராஷ்டிராவின் நாக்பூர் நகரில் அப்போதையப் பிரதமர் இந்திரா காந்தி தொடங்கி வைத்தார்.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Hindi: A Global Voice of Unity and Cultural Pride" என்பதாகும்.
- 12வது உலக இந்தி மொழி மாநாடு-2023 ஆனது ஃபிஜியில் ஏற்பாடு செய்யப்பட்டது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★